15.09.2022

கூடுதல் அமர்வு நீதிமன்றம்**(**விரைவு நீதிமன்றம்**)** விழுப்புரம்**.**

**SC No.205/2018**

அ**.**சா**.2**

பெயர்**,அசாரியா**

சாட்சியை மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டும் என்று எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டதன் பேரில் சாட்சி இன்று மீண்டும் அழைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

பொதுமக்கள் எனது பர்ஸ்யை திருடிய நபரை பிடித்து அடித்த போது ,மீசை வைத்த ஏட்டு அய்யா பொதுமக்களை விலக்கிவிட்டு பர்ஸ்சை திருடிய நபரை கூப்பிட்டு சென்றார். அந்த நேரம் லோகேஷ் என்ற போலீஸ்காரர் இருந்தார். 1வது எதிரி திருகுமரன் என்ற போலீஸ்காரரும் இருந்தார். ரமேஷ்சோ சுரேஷ்சோ பெயர் தெரியவில்லை. அந்த தள்ளுவண்டி வியாபாரி பிடியுங்கள் பிடியுங்கள் என சத்தம் போட்டததால தான் பொதுமக்கள் மேற்கண்டவாறு பர்ஸ் திருடிய நபரை பிடித்தார்கள்., ஸ்டேசனுக்கு பர்ஸ் திருடிய நபர்களை அழைத்து சென்றார்கள். பொதுமக்களில் சிலரும் நானும், காவல் நிலையம் சென்றோம். 3வது எதிரி வாசுதேவன் என்ற போலீஸ்காரர்( சாட்சி அடையாளம் காட்டுகிறார்) புகார் எழுதி தருமாறு என்னிடம் கேட்டார். அப்போது காலை சுமார் 8.20 மணி இருக்கும், நான் எனக்கு எழுத தெரியது என்று சொன்னேன். புகார் எழுதி படித்துக்காட்டுங்கள் நான் கையெழுத்து போட்டு தருகிறேன் என்று சொன்னேன். அதனால், புகார் எழுதி படித்து காட்டினார்கள். அதன்பிறகு புகாரில் நான் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் இது தானா என்று உறுதியாக தெரியாது. புகாரில் உள்ள சாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ.1, என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நபர்தான் பர்ஸ்சை திருடிய நபர் ஆவார். அந்த புகார் புகைப்படம் அ.சா.ஆ.2, 2, 3 ஆவணங்களில் கையொப்பம் வாங்கினார்கள். நான் ஊருக்கு புறப்படுவதாக சொன்னேன்.

காலை 10.10மணிக்கு உள்ள குருவாயூர் வண்டியில் ஊருக்கு செல்ல டிக்கெட் எடுத்துக்கொடுங்கள் என்று போலீசாரிடம் கேட்டேன். அவர்கள் காலம் கடத்தினார்கள். அதனால், நான் ரயில்வே கவுண்டருக்கு சென்று அங்கு பொதுமக்களிடம் உதவி கேட்டு எங்கள் ஊருக்கு டிக்கட் வாங்கிக்கொண்டு குருவாயூர் ரயிலில் எங்கள் ஊருக்கு சென்றேன். 2,3 நாட்கள் கழித்து எங்கள் வீட்டுக்கு சம்மன் வந்தது. ஒரு நபர் கொண்டு வந்து கொடுத்தார். நான் விழுப்புரத்தில் உள்ள தரை தளத்தில் உள்ள நீதிமன்றத்திற்கு வந்தேன். நீதிமன்றத்திற்கு நான் வருவதற்கு முன்பு இந்த வழக்கு தொடர்பாக சாட்சி சொல்லவேண்டும் என்று யாரும் என்னிடம் சொல்லவில்லை. நான் சாட்சி சொல்ல அந்த நீதிமன்றம் வரும் வரை பர்ஸ் திருடிய நபர் இறந்த விபரம் எனக்கு தெரியாது. நான் அந்த நீதிமன்றம் வந்தபிறகு தான் என்னிடம் பர்ஸ் திருடிய நபர் குறித்து நீதிபதி என்னிடம் விசாரித்தார். நான் அடையாளம் என்னவென்று சொன்னேன். பர்ஸ்சை என்னிடம் காட்டி அது எனக்குரியதா என்று கேட்டார்கள். நான் பர்ஸ்சை அடையாளம் காட்டி உறுதிசெய்தேன். கருப்பு கலர் பர்ஸ் மற்றும் அதில் சிட்டிபேங்க் என ஆங்கிலத்தில் எழுதி இருப்பதையும் காட்டி உறுதிசெய்தேன். என்னிடம் இதைபோல் விசாரித்து எனது வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படுவது கடந்த 12.10.2015ந்தேதி விழுப்புரம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட எனது வாக்குமூலம் ஆகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த வாக்குமூலம் சான்றிட்ட நகல் அசா.ஆ.3. என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை காலம் 14ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.4. நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்த பிறகு நான் வீட்டிற்கு சென்றேன். அதன்பிறகு எந்த போலீசாரும் வந்து என்னை விசாரிக்கவில்லை. ஆனால், குற்ற புலனாய்வு போலீசார் இங்கு வரவழைத்து விழுப்புரம் என்னை விசாரித்தார்கள். எனக்கு சம்மன் சார்வு செய்துதான் வரவழைத்தார்கள். அவர்கள் விசாரித்தார்கள். 3 தடவை அவ்வாறு வரவழைத்து விசாரித்தார்கள். 2

நாட்கள் காவல்நிலையத்தில் வைத்தும், 1 நாள் ஒரு ஆபிஸ்சில் வைத்தும் 1 நாள் சென்னையில் ஒரு பெரிய ஆபிஸ்சில் வைத்தும் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விபரங்களை அப்படியே சென்னேன். நான் விழுப்புரம் வந்து நடந்தவை மற்றும் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தவை உட்பட அனைத்து விபரங்களையும் சொன்னேன். தாங்கள் சொல்வதை சொல்லவேண்டும் என்றார்கள், நான் நடந்ததை தான் சொல்வேன் என்றேன். ஊரில் என்னை தேடி வரவேண்டாம் என்று சொன்னேன்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் 2வது வகுப்பு படித்துள்ளேன். கூட்டிகூட்டி படிப்பேன். வேலு குற்றபுலனாய்வு போலீசார் விசாரணையில் 5.5.2014தேதி கோவில்பட்டியில் புறப்பட்டு பஸ்சில் 6.5.2014தேதி காலை 4.50மணியளவில் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் வந்ததாக சொன்னேன் என்றால் சரியல்ல. விழுப்புர்ம் பேருந்து நிலையத்திலிருந்து டவுன்பஸ் மூலம் முண்டியம்பாக்கம் சென்று அங்கு குமார் மேஸ்திரியை தேடியதாகவும், அவர் அங்கு இல்லாததால், அங்கிருந்து விழுப்புரம் இரயில்வே ஸ்டேசனுக்கு பஸ் மூலமாக 7.15 மணிக்கு வந்தேன் என்றால், அது உண்மை ஆனால் இரயில்வே ஸ்டேசனுக்கு வந்த நேரம் காலை 7.50, 8.00மணி இருக்கும். குருவாயூர் இரயிலில் செல்வதற்காக டிக்கெட் எடுக்க சென்ற போது கூட்டமாக இருந்ததாலும், குருவாயூர் இரயில் காலை 10.10மணிக்கு என்பதால், உடை மாற்றிக்கொள்ளலாம் என்று நினைத்து 1வது நடைமேடையில் விநாயகர் கோவிலை தான்டி இறுதிபகுதிக்கு சென்றேன் என்று சொன்னால் உடை மாற்றிக்கொள்ள நான் சென்றதாக சொல்லவில்லை. நான் நடைமேடை இறுதிபகுதிக்கு செல்லவில்லை. நான் நடைமேடை இறுதியில் எனது பேன்டை கழற்றி நடைமேடையில் ஜனங்கள் உட்காரும் திட்டுமேல் வைத்துவிட்டு எனது கையிலியை

கட்டிக்கொண்டிருந்தேன் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. அப்போது 35வயது மதிக்கத்தக்க நல்ல திடமான ஏறுதலை மொட்டை போட்டு சுமார் 1அங்குலம் முடி வளர்ந்த, கட்டம்போட்ட லுங்கியும், லைட்ரோஸ் கலர் சேர்ந்த நீல கலர் கோடு போட்ட சட்டை அணிந்திருந்த1 நபர் என்னை நோக்கி வந்து அவரது வலது கையால் எனது இடது கன்னத்தில் படார் என்று ஓங்கி அடித்தான் என்றும், நான் சிந்தனையின்றி ஸ்டரக் ஆகிவிட்டேன் என்றும், அவன் நான் கழற்றி வைத்திருந்த பேன்டை உதறி அதில் நான் ' வைத்திருந்த கருப்பு கலர் மணிபர்ஸ், மற்றும் மற்றொரு பாக்கெட்டில் இருந்த பழைய நோக்கிய செல்போன் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு போவதை நான் பார்த்தேன் என்றும், அவன் விட்ட அரையில் எனக்கு எதுவும் புரியவில்லை என்றும் போலீஸ் விசாரணையில் நான் சொன்னேன் என்றால் சரியல்ல. நான் நில்லுடா நில்லுடா என்று கத்தியும், அந்த பிளாட்பார்த்தில் இருந்த அடுத்த பிளாட்பார்த்துக்கு அந்த நபர் சென்றதாகவும், போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. பின்னர் நான் புகார் கொடுக்க எங்கே செல்ல வேண்டும் என்று அங்கிருந்த நபர்களை கேட்டபோது, விழுப்புரம் நகர காவல் நிலையம் செல்லுங்கள் என்று சொன்னார்கள் என்றும், 2கி.மீ துரத்தில் உள்ள மேற்படி காவல் நிலையத்திற்கு நான் சென்று சொன்னபோது அங்கிருந்த போலீசார் இரயில்வே ஸ்டேசனில் நடந்த சம்பவத்திற்கு அங்குள்ள இரயில்வே காவல்நிலையத்தில் புகார் கொடு என்று அனுப்பி வைத்தார்கள் என்றும், ரயில்வே காவல்நிலையம் சென்று அங்கிருந்த பாரா போலீசாரிடம் விபரம் சொன்னேன் என்றும், கொஞ்சம் நேரம் இருங்கள் என்றும், போலீஸ் யாரும் இல்லை என்று சொல்லி எனக்க தண்ணீர் கொடுத்தார்கள் என்றும் போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அப்போது பார்க்க 1வது பிளாட்பாரத்தில் தள்ளுவண்டியில் பேப்பர் வைதது விற்கும் ஒரு ஆண் நபரிடம் என்னிடம் பர்ஸ் மற்றும் பணம் ரூ.450/ திருடிய நபர் பேசிக்கொண்டிருப்பதை பார்த்து வேகமாக அந்த நபரை நோக்கி சென்றேன் என்றும், என்னை பார்த்த அந்த நபர் விறுவிறு என்று

அங்கிருந்து சென்றுவிட்டார் என்றும், நான் தள்ளுவண்டிகாரரிடம் சென்று அண்ணே உங்க கூட பேசிக்கொண்டிருந்தவன் தான் எனது பர்ஸ்சை திருடிய நபர் என்று சொன்னேன் என்றும், அதற்கு அவர் உன்கிட்டையும் அவன் ஆட்டையை போட்டுடானா என்று சொல்லி, போலீஸ் ஸ்டேசனில் புகார் கொடு என்றும் இன்னைக்கு அவனுக்கு தோசை உண்டு என்றும், சொன்னார் என்றும் நான் போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. நான் நேராக அந்த போலீஸ் ஸ்டேசன் சென்று அங்கிருந்த மீசை வைத்திருந்த ஏட்டு அய்யாவிடம் விபரத்தை சொன்னேன் என்றும், அவர் என்னை அழைத்துக்கொண்டு 1வது பிளாட்பார்ம் வரும் வழியிலிலேயே பர்ஸ் திருடியவனின் அடையாளம் பற்றி என்னிடம் கேட்டுகொண்டே வந்தார் என்றும், தள்ளுவண்டியில் பேப்பர் விற்ற நபரிடம் டேய் லோகு யாருடா உன்னிடம் பேசிக்கொண்டிருந்தது என்று கேட்டபோது தன்னிடம் யாரும் பேசவில்லை என்றும், அவர் சொல்லவும், ஏன் அண்ணா பொய் சொல்கிறீர்கள் என்று நான் சொல்லவும், மீசைகார ஏட்டு அய்யா பொய்யா சொல்ற என்று தள்ளுவண்டிக்காரனை அடிக்க போனார் என்றும் நான் போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் 2வது பிளாட்பார்ம்மில் நின்ற இரயில் ஜன்னல் வழியாக என்னிடம் பர்ஸ் திருடிய நபர் பார்ப்பதை பர்ர்த்து ஏட்டு அய்யாவிடம அடையாளம் காட்ட அவர் தாவி சென்று அவன் சட்டை காலரை பிடித்து இழுத்து வந்தார் என்றும், பர்ஸ் எங்கே, பணம் எங்கே என்று சொல்லி லத்தியால் அடித்தவாரே பர்ஸ் திருடியவனை காவல் நிலையம் அழைத்து சென்றார் என்றும், பர்ஸ்சை எடுக்கவில்லை என்று அவன் சொல்லி கொண்டே வந்தான் என்றும், நான் உடன் சென்றேன் என்றும், அவனை போலீஸ் ஸ்டேசனில் ஒரு செயின் போட்டு கட்டி அதனை ஜன்னலில் கட்டி உட்கார வைத்தார்கள் என்றும், அங்கிருந்தவர்கள் நீ இங்கேயே இரு என்றும், எஸ்ஐ மற்றும் இன்ஸ்பேக்டர் மீட்டிங் போயிருக்காங்க என்றும், சாயந்திரம் வருவார்கள் என்றும் சொன்னார்கள் என்றும், நான் அதனால் அங்கு காத்திருங்க என்று நான் போலீஸ் விசாரணையில் சொன்னேன்

என்றால் சரியல்ல. அன்று மாலை 6.00மணிக்கு இன்ஸ்பெக்டர் வந்தார் என்றும், நடந்த விபரங்களை அவரிடம் சொன்னேன் என்றும், இன்ஸ்பெக்டர் அந்த நபரை விசாரித்தார் என்றும், அப்போது தான் பர்ஸ் திருடிய நபர் ஓடும் ரயிலில் புத்தகம் விற்கும் நபர் என்பதும், அவர் பெயர் ஜெயவேல் என்றும் எனக்கு தெரியவந்தது என்று நான் போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. தான் பர்ஸ் திருடவில்லை என்று அவன் சொல்லிக்கொண்டிருந்தான் என்றும், இன்ஸ்பெக்டர் அவனை லத்தியால் ஓங்கி பலமாக அடித்தார் என்றும், அதன்பின்னர் இன்ஸ்பெக்டர் புகார் கொடுத்துவிட்டு போ என்று சொன்னார் என்றும், தேவைப்படும் போது கூப்பிடுகிறேன் என்று சொல்லிவிட்டு, இரவு சாப்பாடு எனக்கு வாங்கிகொடுத்துவிட்டு, கைசெலவிற்கு ரூ.150/கொடுத்தார் என்றும் நான் போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. என்னிடம் பர்ஸ் உடன் ' ரூ.450/ பிக்பாக்கெட் அடித்தது தொடர்பாக காவல்நிலையம் அருகே கடந்து சென்ற ஒரு நபரை இன்ஸ்பெக்டர் அழைத்து புகார் எழுதினார்கள் என்றும், அதில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றும், அதில் என்ன எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. புகாரை போலீகாரர்கள் தான் எழுதினார்கள், அவர்கள் படித்துக்காட்டிய பிறகு தான் கையொப்பம் போட்டேன். அன்று இரவு விழுப்புரம் இரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு மறுநாள் 7.5.2014தேதி காலை என்னுடைய ஊருக்கு சென்றுவிட்டேன் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. பர்ஸையும், பணத்தையும், அவன் எடுத்துக்கிட்டான் என்றும், செல்போன் ரூ.200/ மதிப்புள்ள பழைய செல்போன் என்பதால் அதுப்பற்றி நான் போலீஸ்சாரிடம் சொல்லவில்லை என்றும், பர்ஸையும், ரூ.450/யும் மட்டும் கண்டுபிடித்தால் போதும் என்று புகார் கொடுத்து அவ்வாறு ஒரு கையொப்பம் மட்டும் போட்டேன் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. வேறு கையொப்பம் போடவில்லை என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. நிறைய

கையொப்பம் வாங்கினார்கள். அதன்பிறகு நான் ஊர் சென்ற பிறகு 4 நாட்கள் கழித்து இரயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் சில போலீசார் கடலையூர் ஊருக்கு வந்து என்னை பார்த்து காலில் விழுந்துவிட்டார்கள் என்றும், அவர்கள் என்னிடம் நீ கொடுத்த புகாரில் பிரச்சனை ஆகிவிட்டது என்றும், பர்ஸ்சை திருடிய ஜெயவேல் விசாரணையில் இறந்துவிட்டான் என்றும், நீ தான் எங்களை காப்பாற்ற வேண்டும் என்றும், இல்லை என்றால் எங்கள் பிள்ளைகுட்டிகள் எல்லாம் தெருவிற்கு வந்துவிடும் என்று சொல்லி அழுதார்கள் என்றும், அதன்பிறகு சில நாட்கள் கழித்து விழுப்புரம் நீதிபதி விசாரணைக்கு வரசொல்லி சம்மன் அனுப்பியதால், நான் விழுப்புரம் வந்தேன் என்றும், அப்போது, இன்ஸ்பெக்டர் மற்றும் 3 போலீசார் என்னை ஊருக்கு வந்து விருதுநகர் இரயில் நிலையத்தில் என்னை பார்த்து கெஞ்சி எங்களை காப்பாற்ற உன்னால் தான் முடியும் என்று சொல்லி, அழுதார்கள் என்றும், அவர்கள் என்னிடம் பர்ஸ் திருடப்பட்டது 7.5.2014 அன்று தான் என்றும், தங்கள் விசாரணையில் இறந்த ஜெயவேலை யாரும் அடிக்கவில்லை என்றும், நீதிபதி விசாரிக்கும் போது, சொல் என்று என்னிடம் சொன்னார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அப்போது தான் எனக்கு ஜெயவேல் என்பவரை 6.5.2014 அன்று முதல் காவல்நிலையத்தில் வைத்து அடித்து விசாரணை செய்து 7.5.2014 அன்று காலை விசாரணையின் போது பர்ஸ் திருடிய நபர் இறந்துவிட்டார் என்ற முழுவிபரமும் தெரிந்துகொண்டேன் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. போலீசார் எனது காலில் விழுந்து அழுது கெஞ்சியதால், நானும், விழுப்புரம் நீதிபதி என்னை விசாரணை செய்தபோது, இன்ஸ்பெக்டர் மற்றும் போலீசார் கேட்டுகொண்டது போல், ஜெயவேல் எனது பர்ஸ்சை திருடிக்கொண்டு சென்றபோது, நானும், அங்கிருந்த ஜனங்களும் துரத்தி பிடித்ததாகவும், அப்போது அந்த நபர் கிழே விழுந்தது ஓடினார் என்றும், அந்த சம்பவம் 7.5.2014 அன்று நடந்ததாகவும், நீதிபதியிடம் சொன்னேன் என்றும், போலீசாரை பார்ப்பதற்கு

கஷ்டமாக இருந்ததால், அவ்வாறு சொன்னேன் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. நீதிபதி முன்பு ஒரு போட்டோவை காட்டி பர்ஸ் திருடிய நபர் போட்டோவில் உள்ளவரா என்று நீதிபதி கேட்டபோது அந்த புகைப்படத்தில் இருந்த நபர்தான் என்று நான் அடையாளம் காட்டினேன் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் அது உண்மை. நான் விழுப்புரத்திற்கு வந்தது 6.5.2014 தான் என்றும், பர்ஸ் திருடு போனதும், புகார் கொடுத்ததும் அன்று தான் என்றும், அன்று இரவு இரயிலில் புறப்பட்டு, மறுநாள் 7.5.2014 அன்று சொந்த ஊருக்கு வந்துவிட்டேன் என்றும், பர்ஸ் மற்றும் பணத்தை போலீசார் கைப்பற்றினார்களா என்று எனக்கு தெரியாதும் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது ஏட்டு அய்யா பிடிக்கும்போது பர்ஸ் திருடிய நபர் கீழே விழுந்து எழுந்து ஓடவில்லை போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. போலீசார் விழுப்புரம் நீதிமன்றத்தில் அனுமதி வாங்கி மேற்படி பர்ஸ் மற்றும் ரூ.450/ நீதிமன்றத்தில் வைத்து காட்டினார்கள் என்றும், அதில் உள்ள கருப்பு நிற பர்ஸ் என்னுடையது அல்ல என்றும், அதில் உள்ளவாறு இங்கீலிஸ்சில் வெள்ளை நிறத்தில் எதுவும், எழுதி இருக்காது என்றும், நான் வைத்திருந்த பர்ஸ் மிகவும் பழையது, நான் பார்க்கும் பர்ஸ் என்னுடையது அல்ல என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. எப்ஐஆரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றும், புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. இரயில் நிலையத்தில் பர்ஸ் திருடுபோனதும், போட்டோவில் உள்ள ஜெயவேல் என்றும், தற்போது கோர்டில் உள்ள பர்ஸ் என்னுடையது அல்ல என்று நான் வணங்கும் கர்த்தர் மேல் சத்தியம் செய்து சொல்கிறேன் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே விழுப்புரம் சிபிசிஐடி போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும், இரயில்வே போலீஸ் டிஎஸ்பி என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும்,

நான் வைத்திருந்த செல்போனை நானும், எனது வீட்டில் உள்ளவர்களும் பல சிம்கார்டுகள் மாற்றி மாற்றி போட்டு பயன்படுத்தி வந்தோம் என்று போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. மேலே கண்டவாறு விபரங்களை வேலூர் குற்றபுலனாய்வு பிரிவு ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு நான் தற்சமயம் எதிரிகளை காப்பாற்ற உண்மைக்கு புறமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலே கண்ட விபரங்களை நான் வாக்குமூலமாக அளித்தபோது அதனை கணிணியில் டைப் செய்து என்னிடம் படித்துக்காட்டினார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு ஆதரவாக செயல்படுகிறேன் என்றால் சரியல்ல.